**அக்டோபர் - 31**

**"ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும்."**

**- சங் 63 : 3**

கர்த்தருடைய கிருபையை ருசித்து அறிந்திருக்கிறவர்களும், அவருடைய தயையை ஜீவனைப்பார்க்கிலும் நல்லது என்று தெளிவாக அறிந்திருக்கிறவர்களும், ஒவ்வொரு உலகப்பிரகாரமான நல்ல காரியத்தையும், நம்பிக்கையையும், முன்னேறும் ஆசையையும் சந்தோஷமாக அவருடைய பலிபீடத்தில் வைக்கிறார்கள். தங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க மகிழ்ச்சியடைகிறார்கள். அந்தச் செய்தி அவ்வளவு நல்லதாக இருக்கிறதினால் அடக்கி வைத்திருக்கக் கூடாதிருக்கிறது. அதை அறிவிக்க அவர்களை மற்றவர்கள் கூலிக்கு அமர்த்த வேண்டிய தேவையில்லை. ஆனால் அதை அறிவிப்பதும், அதை அறிவிப்பதின் சம்பந்தமாகவுள்ள தேவனுடைய தயையை அனுபவித்தலும் நஷ்டமுண்டாக்கும். அது அவர்களுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணும். பணநஷ்டத்தை உண்டுபண்ணும். உலகப்பிரகாரமான சிநேகத்தை இழக்கக் காரணமாகும். சில வீட்டு உறவுகள் முறியாவிட்டாலும், பரஸ்பர அவநம்பிக்கையை உண்டுபண்ணும். உலகமும் பேர் சபைகளும் கோபங்கொள்ளும் என்று அறிந்தும் இதை செய்ய இஷ்டப்படுகிறார்கள். **- Z ’01, 246 (R 2850)**

நமக்கிருக்கும் தேவனுடைய கிருபை, சிருஷ்டிப்பு, பராமரித்தல், மீட்பு, உபதேசம், நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்குதல், விடுதலை ஆகிய இவைகளைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் இங்கே குறிக்கப்பட்டிருக்கிற விசேஷமான கிருபை, பெறப்பட்ட அடைந்த அழைப்பாகிய கிறிஸ்துவோடு அடையப்போகிற தெய்வீக சுபாவமாகும். இது மானிட ஜீவனைக்காட்டிலும், மிகவும் நல்லது. பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே அதன் சிலாக்கியங்கள் உயர்ந்தவைகள். இப்படிப்பட்ட அழைப்பு உதடுகளுக்கு யேகோவாவின் துதியையும், அவருடைய மிகிமையான ஞானத்தையும், வல்லமையையும், நீதியையும், அன்பையும் வெளிப்படுத்துகிற உண்மையான உபதேசங்களைக் கொடுக்கிறது. ஆகையால், அவருடைய துதியை விளங்கப்பண்ணுகிற அவருடைய அதிசயமான ஏற்பாட்டைக் கூறுவோமாக. **- P ’35, 132.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யாத் 15:1,2; யோபு 36:24; சங் 7:17; 9:11; 22:22-25; 28:6,7; 30:4; 33:1-3; 35:18;43:3,4; ஏசா 38:17; லூக் 1:46,47; யோவா 14:23.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 118 (R 5440)**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் அனுகூலமாக அல்லது பிரதிகூலமாக இருந்தது எது? பலாபலன்கள் எவை?**